# பழியர் இன மக்களின் சடங்களும் மரபுகளும்

இரா.ஜெயம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21
*jeyamraju1985@gmail.com*

## 1. முன்னுரை

மனிதன் கருவுயிர்ப்பது முதல் இறப்பு வரை பல நிலைகளைக் கடந்து வருகின்றான். மக்களினமானது ஒவ்வொரு காலகட்டத்தினை அடையும்; பொழுது அந்நிகழ்ச்சியைக் குறிப்பதற்காகவும், அதன் சிறப்பையும், பண்பையும், பயனையும் நினைவூட்டுவதற்குச் சடங்குகள் செய்யப்படுகின்றன. பழியர் சமுதாயத்திலும் பல்வகைச் சடங்குகள் செய்யப்படுவதைக் காணமுடிகிறது. அவை பழியர் வாழ்வில் நிகழ்த்தப்படும் சடங்கு, சடங்கு உருவாகக் காரணங்கள், திருமணம் சடங்கு, வழிபாட்டுச் சடங்கு, இறப்புச் சடங்கு என்பதே இவ்வாய்வுக் கட்டுரையாக அமைய இருக்கின்றது.

## 2. சடங்கு

மனிதவாழ்வில் தொன்றுதொட்டு இருந்துவரும் சடங்கு பழைய மரபாகும். மூதாதையர் பரம்பரைப் பரம்பரையாகச் செய்த செயல்களுக்கான காரணம், காரியம் எவை என்று ஆராய்ந்து பார்க்காமல் கண்ணால் கண்டவற்றையும்; நிகழ்ந்தவற்றையும் அப்படியே பின்பற்றுவது சடங்குகளின் முறையாகும்.

மனித வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. மனிதன் ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன்னர் கடவுளை வழிபடுகின்றான். மனிதன் கடவுளை வழிகட்ட பின்னர் மற்ற எந்தவொரு செயலையும் செய்யத் தொடங்குகின்றான். மனிதன் அவ்வாறு தொடங்கும் செயல்கள் வெற்றி பெறுகின்றன. மனிதன் கடவுள் தனக்குச் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் செய்யப்படுபவையே சடங்குகள் ஆகும். மனித வாழ்க்கை சடங்குகளில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

## 3. சடங்குகள் உருவாகக் காரணங்கள்

i. பழங்கால மனிதன் நாடோடியாய் வாழ்ந்து வந்தான். நாடோடியாய் வாழ்ந்த மனிதன் மிருகங்களால் கொல்லப்பட்டான்.

ii. மனிதன் வாழ்க்கையில் இடி, மின்னல், புயல், வெள்ளம், விலங்குகள் என அனைத்திற்கும் பயந்து வாழ்ந்தான். மனிதன் இந்தச் சூழ்நிலையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினான்.

iii. மனிதன் காலமாற்றத்தின் காரணமாய் நீர்நிலைகள் உள்ள பகுதியில் குடியேறினான். பயிர்த்தொழில் செய்தான், விளையும் பொருட்களை தெய்வத்திற்கு நன்றி செலுத்தும் வகையில் படைத்து வழிபட்டான். இது போன்ற செயல்களே காலப்போக்கில் சடங்குகள் உருவாக அடிப்படையாயின.

## 4. சடங்கு வகைகள்

பழியர் இன மலைவாழ் மக்களிடம் காணப்படுகின்ற சடங்குகள் இயற்கையோடு தொடர்பு கொண்டுள்ளன.

பழியர்களிடம் சடங்கு வகைகள்

i. பிறப்புச் சடங்கு

ii. காது குத்துச் சடங்கு

iii. பூப்புச் சடங்கு

iv. திருமணம் சடங்கு

v. வழிபாட்டுச் சடங்கு

vi. இறப்புச் சடங்கு

## 5. பிறப்புச் சடங்கு

ஆண், பெண் இருபாலரின் வாழ்வின் அர்த்தத்தை உணர்த்துவது குழந்தைச் செல்வமாகும். குழந்தைகள் நல்லமுறையில் பிறப்பதற்குச்

சில் சடங்குகள் செய்யப்படுகின்றன. நாட்டுப்புறமாக இருந்தாலும், நகர்ப்புறமாக இருந்தாலும் இச்சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பழியர் பெண்கள் குழந்தை பிறப்பதற்கு முன்னால் தங்களுடைய குலதெய்வமான பழிச்சியம்மனை வேண்டிக் கொள்கின்றார்கள். மருத்துவச்சி கருவுற்ற பெண்ணிற்கும் குழந்தைப் பேற்றின் போது நல்லமுறையில் தாயும், பிள்ளையும் நலமுடன் வாழ வேண்டுமென்று மருத்துவச்சி பழிச்சியம்மனை வணங்கி மந்தரித்து திருநீறு பூசுகின்றாள்.

### 6. காது குத்துச் சடங்கு

பழியர்கள் பொருளாதார நிலையின் காரணமாக விருந்து படைத்துக் காது குத்துச் சடங்குச் சிறப்பாகச் செய்வதில்லை.

i. பழியர்கள் மலையில் வாழ்வதால் மலையில் உள்ள காரா முள்ளினைக் கொண்டு காது குத்துகிறார்கள். குழந்தை பெண்ணாக இருந்தால் மருத்துவம் பார்க்கும் பெண்ணே குழந்தைக்குக் காது குத்துகின்றாள்.

ii. பழியர்கள் குழந்தைக்குக் காதுகுத்தும் போது தாய்மாமன் மடியில் குழந்தையை உட்கார வைக்கின்றார்கள். மருத்துவச்சி குழந்தைக்கு காது குத்துகின்றாள். மருத்துவச்சி பழியக் குழந்தையின் காதில் பெற்றோர் வாங்கித் தந்த பித்தளை அல்லது செம்பால் ஆன அணிகலனை அணியச் செய்கின்றாள்.

iii. குழந்தையின் தாய் மாமன் பொருளாதார நிலைக்கேற்ப புதுத்துணியோ அல்லது பணமோ வைத்துக் கொடுக்கின்றார்.

iv. குழந்தையின் பெற்றோர்கள் தாய் மாமனுக்கு புது வேட்டி, சட்டையும், கொடுக்கும் ஒழுகலாறு இன்று காணமுடிகின்றது.

### 6. பூப்படைதல்

பழியப் பெண்கள் பூப்படைந்தவுடன் காட்டுக்குள் ஏதேனும் ஒரு மறைவிடத்தில் சென்று ஒளிந்து கொள்வார்கள். பழியப் பெண்ணின்

பெற்றோர்கள் தேடி அலைவார்கள். பூப்படைந்த பெண்ணின் பெற்றோர்கள் தேடுவது கண்டு பூப்படைந்த பெண் ஒரு கல்லை எடுத்து இன்னொரு கல்லால் தட்டி ஒலி எழுப்புவாள். பூப்படைந்த தான் இருக்கும் இடத்தினைப் பெற்றோருக்கு உணர்த்துவாள். அப்பெண்ணின் பெற்றோர் பார்க்கும் போது பூப்படைந்த பெண் தலையில் முக்காடு போட்டு அமர்ந்திருப்பாள். பூப்படைந்த பெண் முக்காடு போட்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து பெற்றோர்கள் தங்கள் மகள் பூப்படைந்துவிட்டாள் என்று அறிந்;து கொள்வார்கள். பூப்படைந்த செய்தியை தாய்மாமனுக்கும், உறவினருக்கும் தெரியப்படுத்துவார்கள்.

**7. திருமணம்**

**8. நிச்சயதார்த்தம்**

பழியர்கள் அத்தை மகனையோ, மாமன் மகளையோ திருமணம் செய்கின்றார்கள். பழியர்களில் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு வந்து பெண் கேட்கின்றார்கள். பெண்ணின் பெற்றோர் “சம்மதம்” சொன்னவுடன் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு வந்து நிச்சய தார்த்தம் செய்கின்றார்கள்.

பழியார்கள் நிச்சயதார்த்தச் சடங்கின் போது பெரியோர்களின் முன்னிலையில் மணமகன் வீட்டார் வெற்றிலை, பாக்கு, பூ, வாழைப்பழம், போன்ற பொருட்களை வைத்து மணமகனின் பெற்றோர், பெற்றோர் மகளின் பெற்றோருக்குத் தாம்பூலத்தை மாற்றிக் கொடுக்கும் சடங்கே நிச்சய தார்த்தச் சடங்கென அழைக்கப்படுகின்றது.

பழியர்களில் பெற்றோர் இல்லாத ஆண்கள் திருமணம் செய்து கொள்ளும் ஆசை வந்தவுடன் அத்தை வீட்டில் பெண்ணிருந்தால், அத்தை வீட்டில் சென்று தங்கிவிடுகின்றனார்கள். பெண்ணின் பெற்றோர் அண்ணன் மகன் பெண் கேட்டு வந்திருப்பதைப் புரிந்து கொண்டு திருமணம் முடித்து வைக்கின்றார்கள்.

## 9. திருமணச் சடங்கு

மனித இனம் பெருக வேண்டுமாயின் அவ்வினத்தின் திருமணம உறவு முறை என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. பழிய இனத்தாரிடம் திருமணச் சடங்கு இரண்டு முறையில் நடத்தப்படுகின்றது.

i. பெற்றோரால் நடத்தப்படும் திருமணச் சடங்கு

ii. காதல் திருமணச் சடங்கு

## 10. பெற்றோரால் நடத்தப்படும் திருமணச் சடங்கு

பழியர்களின் திருமணம் பெரும்பாலும் பெற்றோரால் நிச்சயிக்கப்படுகின்றது. பழியர்களிடையே பெற்றோhரால் நடத்தப்படும் திருமணத்தில் மணமேடையோ, மணப்பந்தலோ அமைப்பதில்லை. பழியர்களின் திருமணம் குடிசையின் முன்புறமாக உள்ள திண்ணையில் மிக எளிய முறையில் நடைபெறுகிறது. பழியர்களில் ஒரு சிலர் கோயில் பூசாரி, குத்தகைத்தாரர்கள், சங்கத் தலைவர்கள் முன்னிலையில் விநாயகர் கோயிலுக்குச் சென்று தாலி, மாலை, புதுத்துணிகளை வைத்து வணங்கிய பின்னர் குடிசைக்குக் கொண்டு வந்து மணமகள் கழுத்தில் மணமகன் தாலி கட்டுகின்றான்.

பழியர்களில் மேல்மலைப் பழியர்கள் மட்டுமே மணமக்களுக்கு புதிய ஆடைகள் அணியச் செய்கின்றார்கள்.

## 11. காதல் திருமணச் சடங்கு

i. பழியர்களிடம் காதல் திருமணமும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பழியர்கள் திருமணத்திற்கு முன்னரே ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்கின்றார்கள். பழிய மக்களிடம் காதல் திருமணம் செய்வது இன்றும் காணப்படுகின்றது.

ii. பழிய இனப்பெண்களை நிலத்தில் உள்ள இளைஞர்கள் திருமணம் செய்துக் கொண்டு வாழ்வதனைக் காணமுடிந்தது.

iii. பழியர்களிடம் காதல் திருமணம் செய்து கொள்பவர்கள் சிறுமலையை விட்டுச் சென்று கொடைக்கானல், பழனிமலை, வருச நாட்டு மலை, போடி மலைப் பகுதிகளுக்குச் செல்கின்றார்கள். காதல் திருமணம் செய்து கொண்ட மணமக்கள் மற்றமலைகளில் சிறிது காலம் வாழ்ந்துவிட்டு சிறுமலைக்கே திரும்பி வருகின்றார்கள்.

iv. பெற்றோர்கள் காதல் திருமணம் செய்துக் கொண்ட மணமக்களை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

## 12. இறப்புச் சடங்கு

மனித வாழ்வில் இறப்பு என்பது இறுதி நிலையாகும். மனிதர்களின் இறப்பு தவிர்க்க முடியாதது, வயது முதிர்ச்சி காரணமாகவோ அல்லது உடல்நலக் குறைவு காரணமாகவோ இறப்பு ஏற்படுகிறது.

> "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
>
> விழிப்பது போலும் பிறப்பு"

என வள்ளுர் இதனைக் குறிப்பிடுகின்றார்.

ஆதி மனிதர்களிடையே முதன்முதலில் தோன்றிய சடங்குகள் ஈமச்சடங்குகள் ஆகும்.

பழிய இன மக்கள் இறப்புச் சடங்கினை இரண்டு முறையயில் செய்கின்றார்கள்.

i. குடிசைக்கு அருகில் புதைத்தல்

ii. காட்டுக்குள் புதைத்தல்

**13. குடிசைக்கு அருகில் புதைத்தல்**

i. பழியர்களில் மேல்மலைப் பழியர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றார்கள். பழியர்களுக்குப் புதைப்பதற்கென்று தனியிடம் கிடையாது.

ii. பழிய இன மக்கள் வாழும் இடத்திற்குச் சற்றுத் தள்ளி வெற்றிடத்தில் இறந்தவரைக் குழியில் புதைக்கின்றார்கள்.

iii. பழிய மக்களுக்கு நிலத்து வாழ் மக்களைப்போன்று வெட்டியானோ, நாவீதரோ, வண்ணானோ தனியே இல்லை. பழியர்கள் இறந்தவருக்கு செய்ய வேண்டிய எல்லாச் சடங்குகளையும் இறந்தவரின் குடும்பத்தில் உள்ள ஆண்களே (மகனோ அல்லது சகோதரனோ) செய்கின்றார்கள்.

**14. காட்டுக்குள் புதைத்தல்**

சிறுமலை வாழ் மேல்மலைப் பழியர்களிடமிருந்து கீழ்மலைப் பகுதியில் வாழும் பழியர்கள் வேறுபடுகின்றார்கள்.

**வள்ளிக் கிழக்கு தோண்டிய குழியில் புதைத்தல்**

i. பழியர்கள் கீழ்மலைப் பழியர்கள் இறந்த உடலை வள்ளிக்கிழங்கு தோண்டிய குழியினைப் பார்த்து அக்குழிக்குள் பிணத்தை வைத்துப் புதைப்பார்கள்.

ii. பழியர்கள் வள்ளிக் கிழங்கு தோண்டிய இடத்தில் குழியினை மூடாமல் அப்படியே வைத்திருப்பதைக் காணமுடிந்தது.

iii. பழியர்கள் தொடக்க காலத்தில் பாறை இடுக்குகள், பள்ளங்களில் உள்ள மறைவிடங்களில் பிணத்தினை வைத்து இலை, தழைகளைப் போட்டு மூடி வைத்து விட்டு வந்து விடுவார்கள்.

iv. பழியர்களில் கீழ்மலைப் பழியர்களும் ஆதிகால மனிதர்களைப் போன்றே குகைகள், பாறை இடுக்குகள், பள்ளங்கள் போன்ற

இடங்களில் இறந்தவரின் உடலை வைத்து விட்டு வேறு இடத்திற்குச் சென்று விடுகின்றார்கள்.

## 15. முடிவுரை

பழியர்கள் வளமுடன் வாழவும், தொழில்கள் செழிக்கவும் பல சடங்குகளைச் சென்கின்றார்கள். பழியர்களின் பிறப்புச் சடங்கு முதல் இறப்புச் சடங்கு வரை உள்ள சடங்கு நிகழ்வுகளில் சில மற்ற இனமக்களிடம் இருந்து வேறுபட்டுக் காணப்படுவதை அறிய முடிந்தது.

i. பழியப் பெண்களுக்கு இக்காலத்தில் மருத்துவச்சியே பிரசவம் பார்க்கிறாள்.

ii. பழியர்கள் காது குத்துச் சடங்கில் பொருளாதார மற்றும் சூழ்நிலை காரணமாய் விருந்து படைப்பதில்லை.

iii. பழியர்கள் பூப்புச் சடங்கில் தாய்மாமன், தாய்மாமன் மனைவி முக்கிய இடம் பெறுவதை அறிய முடிகின்றது. பழியப் பெண்கள் பூப்படைந்த முதல் நாள் பழிய ஆண்கள்; வேட்டைக்குச் செல்வதும் வேட்டை கிடைக்கவில்லையெனில் குடிசையைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டு வேறொரு குடிசை அமைப்பதும் புதுமையாய் உள்ளது. பூப்படைந்த பெண்ணை அருள் விளாரினால் அடிப்பதனை அறியமுடிகின்றது.

iv. திருமணச் சடங்குகள் குடிசை முன்புறம் நடத்தப்படுவதை அறிய முடிகின்றது. திருமணத்தின் போது இரண்டு நாட்கள் விருந்து படைப்பதை அறிய முடிகின்றது. பழியர்கள் திருணச் சடங்கினை எளிமையாய் நடத்துகின்றார்கள்.

v. பழியர்கள் வழிபடும் பழிச்சியம்மனையே சிறுமலையில் உள்ள மற்ற இனமக்கள் வணங்குவது ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உணர்த்துவதை அறிய முடிகின்றது.

vi. பழியர்களுக்கென்று தனிச் சுடுகாடு இல்லை என்பது தெரிவருகின்றது.

vii. பழியர்களில் மேல்மலைப் பழியர்கள் பாடை செய்து, பிணத்தினை ஆற்றுக்குத் தூக்கிச் சென்று குளிப்பாட்டுவது வினோதமாய் இருப்பதைக் காணமுடிகின்றது. ஈமச்சடங்கிற்கு வந்தவர்களின் காலினைக் கழுவுதல், ஆண் செத்தால், பெண்ணும், பெண் செத்தால் ஆணும் மண் தள்ளுதல் புதுமையாய் உள்ளது. பழியர்களில் கீழ்மலைப் பழியர்கள் இறந்தவர்களைவ ள்ளிக் கிழங்கு தோண்டிய குழியில் புதைக்கின்றார்கள்.

## துணைநூற்பட்டியல்


திருக்குறள் -3 வது அதிகாரம், ப.339.

அன்னகாமு, சி, மேல்மலை மக்கள், தஞ்சாவூர், 1961

சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், சென்னை, 1974

கதிரேசன், தே, பழியர் வாழ்வியல், மதுரை, 1984

பெருமாள், இரா, பழியர் வாழ்வும் சடங்குகளும், மதுரை, 1987.

சக்திவேல், சு, தமிழ் நாட்டுப் பழங்குடி மக்கள், மதுரை, 1998

நசீம்தீன், பீ, இடுக்கி மாவட்டப் பழங்குடிகளின் வழக்காற்றியல், சிவகங்கை, 1990.